
ஜரீனா முஸ்தபா

# பொக்கிஷம்



(7) Rinza Mohamed

PlV 21

**Al. Haja, A.C. Jareena Musthafa**
(Writer)
No: 120 H, Bogahawattha Road,
Welivita, Kaduwela.
Tel: 011 5020936 / 011 5050983

ஜரீனா முஸ்தபா

# பொக்கிஷம்

PENA PUBLICATION

**வெளியீடு**

பேனா பப்ளிகேஷன் - கிண்ணியா
Mobile: +94 779300397
Email: firosmi.pena@gmail.com

இது—
உதட்டில்...
உள்ளத்தில்...
உணர்வில்...
உயிரில்...
ஐக்கியமான என்
அல்லாஹ்வுக்காக..!

**பொக்கிஷம்**

● கவிதைகள் ● ஏ.சி. ஜரீனா முஸ்தபா ● முதற்பதிப்பு: டிசம்பர் 2014 ●பக்கங்கள்: 80 ● பக்க வடிவமைப்பு அம்ரா கிராபிக்ஸ், கிண்ணியா (0775153943) ●கணினி பதிப்பு: பேனா பப்ளிகேஷன், கிண்ணியா, இலங்கை ● அச்சு: IPC Printing Press, 23, De vaas lane, grandpass, colombo 14, sri Lankna ●ISBN - 978-955-0932-11-5 ●Price: 250.00

– பேனா நேர்கோட்டில் பேசும் –

PENA PUBLICATION

## ஏ.சீ.ஜரீனா முஸ்தபா

**1967**

ஸ்ரீ ஜயவர்தனபுர, பிட்டகோட்டையில் பிறந்தவர், கடுவெல வெலிவிட்டையில் வசித்து வருகின்றார். சென்மேரீஸ் மத்திய கல்லூரி பழைய மாணவியான இவர் இலக்கியத்தில் 30 வருட அனுபமிக்கவர். இதுவரை 7 நாவல்களை எழுதி "இது ஒரு ராட்சஷியின் கதை" (என்ற நாவலுக்காக சர்வதேச பரிசைப் பெற்றவர்) அவருடைய "ஒரு அபலையின் டயறி" தற்போது 4ஆம் பதிப்பு செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. 85-87களிலேயே மதூகரம், வெண்ணிலா போன்ற சஞ்சிகைகளில் இணை ஆசிரியராக செயற்பட்டவர். தன்னகத்தே பல திறமைகளைக் கொண்ட இவர் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, துணுக்குகள், சிறுவர் இலக்கியம் பாடல், நாடகம் போன்றவற்றில் திறன்மிக்கவர். கணவர் முஸ்தபா மற்றும் நான்கு குழந்தைகளின் தாய் இவர் இரண்டு பேரக் குழந்தைகளை கொஞ்சி விளையாடிக் கொண்டே இன்னும் பல படைப்புகளை தர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக! ஆமீன்!

# ஜரீனா முஸ்தபா
# தந்த பா
# பொக்கிஷம்

தத்துவம் யதார்த்தம் சேர்த்து
தக்கதாய்க் கவிதை கோர்த்துப்
புத்தகம் தந்தாய்! ஞானப்
புதையலாய்...! பொக்கி ஷந்தான்!
நித்தியம் அநித்தி யத்தை
நிச்சயமான "மௌத்தை'
சத்திய வரியில் சொன்னாய்
'ஜரீனா முஸ்த பா' நீ வென்றாய்!

-●-

எளிமையாய் இனிமை யாய் நீ
இயற்றிய பாக்க ளெல்லாம்
தெளிந்ததாய்த் தேர்ந்த தாய்த் தாய்த்
தமிழிலே "அமுத வெல்லம்!"
வெலிவிட்ட 'ஜரீனா' இங்கு
வெளியிட்ட நூலுக்குள்ளே
மொழிசற்றும் பிசகா வண்ணம்
வந்த பாத் தொகுதி நன்றே!

ஆவலைத் தூண்டு கின்ற
அனைவரும் வேண்டு கின்ற
நாவலைத் தந்த இந்த
நேர்குணம் கொண்ட வள்: தன்
பூவுளத் துள்ளி ருந்து
புறப்பட்ட சிந்த னைகள்
பா வள மாக வந்து
பரவச மூட்டு திங்கு!

-•-

எண்ணிலாச் சேவை யாற்றும்
எண்ணமே எருத்தா ளர்க்கும்
கண்ணியம் வாய்ந்த நேர்மை
கவிஞர்க்கும் ஆயுள் சொத்து!
உண்மையில் “ஜரீனா முஸ்தபா”
உன்கவி தைகள் முத்து!!
கிண்ணியா அமீர்அலி யான்
கவிதையில் வாழ்த்து கின்றேன்!

**கிண்ணியா அமீர் அலி**

**24-06-2014)**

## மதிப்புரை

இந்தியாவின் மாநிலம் தமிழ் நாட்டின் தலைநகர் சென்னையிலே வாழும் கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர், பாவேந்தர் விருது பெற்ற பன்மொழி அறிஞர், எழுத்துச் செம்மல், அய்யம் பதிராசா என்கிற ராஜா நசீர் அஹ்மது அவர்கள் வழங்கிய மதிப்புரை

திருமதி 'ஜரீனா முஸ்தபா' அவர்களை குடும்ப நண்பனாக நன்கு அறிவேன். அவர்கள் நல்ல எழுத்தாளர், கவிஞர், தமிழ் சொற்களை உரிய இடத்தில் பயன்படுத்துவதில் வல்லவர்.

சிறப்பு என்னவென்றால் பள்ளியில் தமிழ் படிக்கவில்லை. சிங்களம்தான் படித்தார். எனினும் இறைவன் இவருக்கு தாய் மொழி தமிழ் என்பதால் தன்னார்வத்தோடு படித்து இதுவரை ஆறு புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார். அனைத்துமே படைப் பிலக்கியங்களுக்கு ஒப்பானவை. கதைகளில் கற்பனை கலந்த உண்மை நிகழ்வுகள்! வாழ்க! அவர் எழுத்துப் பணி! வளர்க அவர் தம் இலக்கியப் பணி.

இந்த வெளியீட்டைப் பொறுத்தவரை களிப்பூட்டும் கவிதை களால் உளம் நிறைய செய்து விட்டது. அத்தனையும் முத்துக்கள் படித்“தேன்”. அது ஒரு படித்தேன். படித்து விட்டு கீழே வைக்க மறந்தேன் என் உணர்வுகளுக்கு மருந்தாக இருந்தது. வாழ்க்கைக்கு மறுத்“தேன்”. இன்று மறுபடியும் தேனாக இனித்தது.

சொல்நயம், கவிநயம், கவித்துவம், எழுத்துபா வெண்பா, ஆசிரியர் பா என இல்லாமல் புதுக்கவிதை முறையில் அழகிய சொற்களால் வர்ணம் கூட்டி ஜொலிக்கிறது. வானில் கவிதை யாய் மின்னுகின்றது. இப்புத்தகத்தை அனைவரும் வாங்கிப் படித்துவிட்டு எனக்கு கருத்துரை எழுதுங்கள். எங்கள் ‘பிரிவு’ இதழில் ஒவ்வொரு கருத்துரையும் பிரசுரிக்கப்படும் என்பதை மனதாற தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

**‘அய்யம்பதிராசா’ ராஜா நஜீர், பிரிவு’ சிறப்பாசிரியர்**

**தபால் பெட்டி எண் : 404,**

**இலாயப் பேட்டை, சென்னை– 600014**

# உங்களோடு சில நிமிடங்கள்...

அகிலத்தின் அதிபதி அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும் அல்ஹம்துலில்லாஹ்.

அவனது பேரருளால் மீண்டும் ஒரு நூலினூடாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. இலக்கிய உலகில் பிரவேசித்து முப்பது ஆண்டுகள் ஆகியும் இதுவரை ஒரு கவிதைத் தொகுப்பை வெளி யீடு செய்யவில்லை. அதற்குக்காரணம் உண்டு. எனது முதல் நாவல் தேசிய தமிழ் பத்திரிகையான மித்திரன் வாரமலரில் "ஓர் அபலை யின் டயறி" எனும் தலைப்பில் தொடர்கதையாக பிரசுரிக்கப் பட்டு வந்த காலத்திலேயே பெரும் வரவேற்பு கிடைத்தது. அது நாவலாக வெளியீடு செய்த பின் மிகப்பெரும் வெற்றியும் வரவேற்பும் கிடைத்தது. தற்போது அந்த நாவல் நான்காம் பதிப்பு வெளியீடு செய்வதற்கும் அந்த வெற்றிதான் காரணமாக இருந்தது. அதன் பின் இந்தியாவில் நடந்த சர்வதேச நாவல் போட்டியில் பரிசு பெற்ற "இது ஒரு ராட்சஷியின் கதை", "37ம் நம்பர் வீடு" ஆகிய நாவல்களும் பெரும் வரவேற்பைப் பெற்று, 2ம் பதிப்புக்களுக்காக காத்திருக்கின்றன. அத்தோடு மீலாத்நபிவிழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்குவதற்காகவும் இந்த நாவல் கள் தகுதிபெற்றன. சிறுவர் சிறுகதை தொகுதியான "ரோஜாக் கூட்டம்" பல பாடசாலைகளில் சிறுவர் போட்டிகளுக்காக பல

வருடங்களாக பரிசாக வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு அரச கல்வித் திணைக்களத்தினால் அரச அங்கீகாரம் கிடைத்தது. அத்தோடு யதார்த்தங்கள் சிறுகதை தொகுப்புக்கும் நல்ல வரவேற்பு கிடைத்தது.

எனது முதல் நாவலை வாசித்த வாசகர்கள் தொடராக அடுத்த நூல்களையும் வாசித்து வருகின்றனர். அத்தோடு அடிக் கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு உங்கள் அடுத்த நாவல் எப்போது வெளிவரும் என்ற கேள்வியையும் அடிக்கடி எழுப்புகின்றனர். ஆயினும் இதுவரையில் கிட்டத்தட்ட 400க் கும் மேற்பட்ட கவிதைகளையும் எழுதியிருக்கின்றேன். பலதேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகையிலும், வானொலியிலும் மிக ஏரா ளமான கவிதைகள் ஒலிபரப்பப்பட்டும் பிரசுரமாகியும் உள்ளன. ஆனால் கவிதைகள் பற்றி பேசுபவர்களையும், ரசிப்பவர்களையும், வாசிப்பவர்களையும் மிகக் குறைவாகக் காண்கின்றேன். நாவல் சிறுகதைகளை தமிழ் கற்றவர்களும் கற்காதவர்களும் வாசிக் கின்றனர் வரவேற்கின்றனர். ஆனால் கவிதைகளைப் பொறுத்த வரையில் இந்நிலை முற்றிலும் மாறுபட்ட அல்லது பின்தங்கிய நிலையையே அவதானிக்க முடிந்தது. ஆகவேதான் நான் ஓர் கவி தைத் தொகுப்பை வெளியீடு செய்ய முன் அதன் காரணத்தை முதலில் அறிந்து கொள்ள வேண்டும் என்ற முடிவில் இருந்தேன். கவிதைகளை தொட்டுப்பார்க்காத பலரிடம் வினவினேன் “ஏன் உங்களுக்கு கவிதைகள் பிடிப்பதில்லை என”. அதற்கு கவிதைகள் பிடிக்காமல் இல்லை. படித்தாலும் அதன் அர்த்தம் புரிவதில்லை என்ற பதிலே பலரிடம் வெளியானது.

கவித்தொகுப்பு வெளியீட்டாளர்களுக்கு (கவிஞர்களுக்கு) உபயோகமாக வேண்டும் என்பதற்காகவேதான் என்னுரையில் இதை எழுதுகிறேன்.

கல்வியைத் தேடி எல்லோரும் ஓடுகிறார்கள். அதுபோல் தமி ழைத் தேடி எல்லோரும் ஓடுவதில்லை. ஓடினாலும் பலனில்லை. மேல் மாகாணத்தைப் பொருத்தவரையில் தமிழ் பாடசாலை களுக்கு தமிழை வளர்க்க வேண்டும் என்ற தேவையை விட தம் பிரதேசவாசிகளுக்கு மட்டுமே முக்கியத்துவமளித்து, இட

மளிக்க வேண்டும் என்கின்ற இலட்சியமே மேலோங்கி உள்ளது. இதனால் "தமிழ்" வளர்ச்சி பாதிப்படைவது குறித்து கவலைப்படுவதற்கோ அல்லது இந்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கோ யாரும் இருப்பதாக தெரியவில்லை.

இதேகாரணத்தினால்அன்று என்னால் நுகர முடியாமல்போன தமிழ் கல்வியை, அதன் பின் என் பிள்ளைகளாலும், இப்போது என் பேரக்குழந்தைகளாலும் நுகர முடியாமலே உள்ளது. இது எமது வாழ்க்கைக்கு ஒரு குறையல்ல. வளர்ச்சிகளுக்கு தடையுமல்ல. இருப்பினும் இந்நிலைமையை மாற்ற இச்சமுதாயம் முன் வந்தால் மாத்திரமே "தமிழை" ஆரோக்கியத்துடன் வளர்க்க முடியும் என்பது எனது கருத்து.

"படித்தவர்கள் எல்லாம் அறிவாளிகள் இல்லை படிக்காதவ ரெல்லாம் முட்டாள்களும் இல்லை" என்பது பொது மொழி ஆனால்...

"வாசிக்காதவரெல்லாம் தமிழ் கற்காதோர் இல்லை. வாசிப்பவ ரெல்லாம் தமிழ் கற்றோரும் இல்லை" என்பதே புது மொழி.

தமிழ் கற்காத பலர் ஆர்வத்துடன் வாசிக்கக் கூடியவர்களாக உள்ளனர். நமது ஈழ நாட்டில் வியப்பின் எல்லைக்கு அழைத்துச் செல்லுமளவிற்கு மிகத் தரமான கவிதைகளை படைத்தளிக்கக் கூடிய திறமைமிக்க கவிஞர்கள் இருக்கிறார்கள். மிக அழகான, ஆழமான கருத்துக்களை உள்ளடக்கிய அதிநவீனத்துவமிக்க படைப்புகளை வெளியீடு செய்பவர்கள் இருக்கிறார்கள். இவர்க ளது கவிதைகள் யாவும், யாவரது உள்ளங்களிலும் புரிதலுடன் ஊடுருவி நிலையான பதிவைப் பெற வேண்டும் என்பதே எனது அவா. "பொக்கிஷம்" நான் வெளியீடு செய்யும் முதலாவது கவிதைத் தொகுதி. எதை எழுதினாலும் "கற்ற, கற்காத" எல்லோ ரையும் எனது கருத்துக்கள் சென்றடைய வேண்டும் எனும் நோக்கிலே எதையும் எழுதத் துவங்குவேன். இதில் ஏதும் குறை பாடுகள், அல்லது புரியாதவைகள்இருப்பின்சுட்டிக்காட்டுங்கள்.

அதுவே எனக்கு உபயோகமாக அமையும். "மித்திரன் வார

மலர்" தேசிய பத்திரிகையில் தொடர்கதையாக பிரசுரமாகிய "அவளுக்குத் தெரியாத ரகசியம்" எனும் நாவல் தற்போது அச்சில் உள்ளது. அடுத்ததாக "மீண்டும் வசந்தம்" எனும் சிறு-கதைத் தொகுப்பும், உணர்வின் வலி" எனும் தலைப்பில் கவிதை தொகுப்பும் வெளிவர உள்ளன. எனது படைப்புகளுக்கெல்லாம் வரவேற்பைத் தந்து ஊக்கமளித்து வரும் வாசகர்களுக்கெல்லாம் எனது நன்றியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இதை அழகிய முறையில் அமைத்து எனது முயற்சிக்கு துணை புரிந்த "பேனா பப்ளிகேஷன்" பணிப்பாளர் சகோதரர் ஜே. பிரோஸ்கான் அவர்களுக்கு எனது மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு இந்த தொகுப்பிற்கு தமது மேலான உரைகளை வழங்கிய தென்னிந்திய பிரபல நூலாசிரியர் (எழுத்தாளர்) நஸீர் அஹமட் (ஆலயம்பதி ராஜா) அவர்களுக்கும் பிரபல கவிஞரும் எழுத்தாளரும் அறிவிப்பாளருமான கிண் ணியா அமீர் அலி அவர்களுக்கும் எனது மேலான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது சகல முயற்சிகளுக்கும், வெற்றி களுக்கும் துணைபுரிகின்ற எனது அன்புக் கணவர் ஏ.எம். முஹம்மது முஸ்தபா ஹாஜி அவர்களுக்கும், எனது சகல வேலை களிலும் தமது பங்களிப்பை பகிர்ந்து கொள்கின்ற அருமைச் செல்வங்களான பாத்திமா சம்ரூத், பாத்திமா லதீபா (அல் ஆலி-மா) முகம்மது யூசுப் முகம்மது கஸ்ஸாலி, மருமகள் பாத்திமா ஹப்ஸா ஆகியோர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின் றேன். அனைத்தையும் விட இந்த அற்பக் கருவியை இயக்கி நிலையில்லா இத்தரணிக்கு இனம் காண வைத்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு ஈடிணையில்லா எனது நிரந்தர நன்றிகளை அள்ளிப் பொழிகின்றேன். அல்ஹம்துலில்லாஹ்! இன்ஷா அல்லாஹ்! மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்

Mrs. A.C. JAREENA MUSTHAFA
No: 120.H Bogahawattha Road, Weliwita, Kaduwela
011 5020 936, 011 5050 983
(2014.08.16)

# உணர்ந்து கொள்..!

புரிகிறதா?
என்
இதயம் இயம்பும்
இனிதான அன்பு

கேட்கிறதா?
அல்லும் பகலும்
உறவாடி
உரையாடிக் கொண்டிருக்கின்ற
என் இதய
உணர்வுகளின்
ஒலி ??

ஏற்றுக் கொண்டாயா?
ஈடிணைகளற்ற
எனது
நேசத்தை
பாசத்தை ???

சொல்!
எனது வினாக்களுக்கு
உந்தன் விடை!

தொடுவதற்கும்
விடுவதற்கும்
உள்ளதன்று
எந்தன் நேசமென
உணர்ந்து கொள்
எனையாளும்
என் ஏகனே!

*நன்றி: ஓசை 2010 கார்த்திகை*

## மணமகள் வேண்டும்

சீதனம் வேண்டாம்!
சீ...தனமும்...
வேண்டாம்!!
எனக்கொரு
மணமகள் வேண்டும்
மருமகளாக!!

திருமறையெனும்
அருள்மறையை
தினம்
கரமேந்தி ஓதும்
நபிவழி பேணி
மாண்புடன் வாழும்
மார்க்க வழியில்

வழுவாது செல்லும்
வல்லோன் புகழை
வாயாற மொழியும்
ஒரு
மணமகள் வேண்டும்
மருமகளாக!

உலக இச்சையின் பால்
பேராசைகளற்ற
பாவக்கடலின் பால்
தடுமாற்றமற்ற
திருவசன மொழியைத்
தனதெனக் கொண்ட
திருமறைச் சொல்லை
உளமேந்திக் கொண்ட
தனவந்தமில்லா
தயவுள்ளங் கொண்ட
தயவானவள் வேண்டும்
மணமகளாக

உறவுகளை
உணர்வுகளை
உயர்வென மதிக்கும்
போலிகளை மாயைகளை
தூசெனத் தூற்றும்
உயர்வானதோர்
உள்ளங் கொண்ட

உண்மையானவள்
உயர்வானவள் வேண்டும்
மணமகளாக!

காசுகள் வேண்டாம்
கலசங்கள் வேண்டாம்
“சீர்”கள் வேண்டாம்
சிறுமைகள் வேண்டாம்
பெருமை, பொறாமை
கர்வம்
அகங்காரம் ஆணவம்
சுயநலம் கொண்ட
ராட்சஷியும் வேண்டாம்!

இதமான
இனிமையான
இறையச்சம் கொண்ட
ஒரு
மென்மையான
மேன்மையானவள்
நான் ஈன்றவனுக்குத்
துணைவியாக
மணமகளாக வேண்டும்
என்
மருமகளாக, (ஆமீன்)

நன்றி:
அல்ஹஸனாத்
2011

# நீ...தான்!

நீ தரும்
சோதனைகளின் போதும்
வேதனைகளின் போதும்
எனதுள்ளத்தினைப்
பலவீனப்படுத்தாதே...
என் ஏகனே...
பலப்படுத்து

நீ தரும்
துன்பங்களின் போதும்
துயரங்களின் போதும்
எனதெண்ணங்களைத்
துருப்பிடிக்கச் செய்யாதே
என் ஏகனே
தூய்மைப்படுத்து!

காத்திருக்கிறேன்...
உன்
சோதனைகளுக்காக!
அஞ்சவில்லை...
நீ தரும்...
வேதனைகளுக்காக!
திக்கற்ற இத்தரணியிலே...
தவிப்புற்று
வாடவில்லை!!!

போதும் போதும்
எனும்
எண்ணங்கூட
இல்லை!!

அலுத்துவிடாதே!
சலித்துவிடாதே!! பூமழையாய்
பொழிந்து கொண்டேயிரு...
உனக்குப்
போதுமாகும் வரையில்!!!

எனது
தேவையெல்லாம் பரிபூரணமான
உனது அன்பினை
அடைய வேண்டுமென்பதையன்றி
வேறன்று!

உணர்ந்து கொள்!
புரிந்து கொள்!!

எனது
உள்ளத்திற்குள்...
உணர்வுக்குள்...
நிலையான ஐக்கியம் பெற்றிருப்பவன்
நீதான் என்று.

15.01.2009

நன்றி: அல்ஹஸனாத்

# தொடர்கதை

உதவியே வாழ்தல் என்றும்
உகந்ததென்றே யானும்
உலகில் நினைத்ததிலென்ன
பாவமோ?

ஏமாளியாக என்றும்
ஏமாற்றிடத்தானென்றும்
எனை
எண்ணிய
எண்ணங் கூடுமோ??

பாருலகிலேபல...
பாவங்களேமித...
பயமின்றியேயுள
புரிகின்றவைகளிளென்ன
லாபமோ ??

கேட்போருக்கே கேடு
செய்வோரேயுண்டு
அவை...
மறுப்போருக்கேயென்றும்...
மிதிப்போரேயுண்டு
இத்தொடரிலே...
என்ன நீதமோ?

நன்மைகளை செய்தலையும்
நன்றே செய்தலையும்
நானிலத்திலேயின்று
நகைத்திடுதல்
என்ன நியாயமோ?

## வேண்டாம்

சுமந்து...
செல்லக் கூடும்
ஒரு நாள்
என்னை ஜனாஸாவாக!

இன்று
பிணிகளுக்கும்
துன்பங்களுக்கும்
வராத நீ...
அன்றும்
வேண்டாம் வர...
போலிக்
கண்ணீர் சிந்த!!

உறவாடல்கள் யாவும்
உயிரோடும்
உணர்வோடும்
வாழும்
உறவுகளுக்கே...

உயிர் போனால்

உடல்

வெறும் கூடு!

அதனோடு

ஓர்

உறவு எதற்கு?

வேண்டாம்!

போலிக் கண்ணீர்...

கருணை...

கரையும் வார்த்தைகள்

எதுவுமே...

உயிரோடு

உறவாடாத

உறவுகள் எதுவும்

வேண்டாம்

உயிருக்குப் பின்னாலும்

29.11.2010

நன்றி: எங்கள் தேசம்

01.01.2015

# ஓ மனமே

பெருமைக்குச்
சொந்தக்காரன்
யார்
எனக்கேட்டேன்
"முட்டாள்"
என்றாய்!

சாதனையின்
சொந்தக்காரன்
யார்
எனக்கேட்டேன்
"முயற்சி"யுடையான்
என்றாய்!!

அறிவின்
சொந்தக்காரன்
யார்
எனக்கேட்டேன்
"தன்னடக்கம்" உடையவன்
என்றாய்!!!

ஈதலின்
சொந்தக்காரன்
யார்
எனக்கேட்டேன்
“இரக்கம்”
உள்ளவன் என்றாய்!!!

கொடுமைகளின்
சொந்தக்காரன்
யார்
எனக்கேட்டேன்
“தீயவன்”
என்றாய்.

மனிதன்
என்பவன்
யார்
எனக்கேட்டேன்
“மனிதம்”
என்றாய்

என் வினாக்களுக்கு
விடையளிக்கும்
“நீ யார்?
எனக்கேட்டேன்!
உன் “மனம்”
என்றாய்.

23.04.2009

# பூஜ்ஜியங்கள்

நோகிறது
புண்ணாகிப்போன
என்
இதயம்!

ஆற்ற முடியவில்லை
இன்னும்
வேதனையில்
வெந்து கொண்டிருக்கின்ற
என்
உணர்வுகளை!

எங்கே?
நான் மலையென
நம்பியிருந்த
அந்தப்
பாசங்கள்??

ஏன்?
ஏதற்காக?
இத்தனை இத்தனை
"விஷ"ங்கள்
உறவுகளின் உள்ளங்களில்?

இனியும் வேண்டாம்
போலித்தனமான
இந்தப்
பாசங்கள், வேசங்கள்

திராணியில்லை
தாங்கிட
ஏமாற்றங்களை!

தலையெழுத்து!
பாவப்பட்ட இந்த ஜீவனின்!
நேசங்களே
பூஜ்ஜியங்களாக!

நன்றி:
தினகரன் வாரமஞ்சரி / மித்திரன் வாரமலர்
15.09.2013

# மனசாட்சியே! விடை சொல்!!

தீமைகளை
தடுக்கும் போதும்
நன்மைகளை
ஏவும் போதும்
ஆதாரங்கள் கேட்டு
அடம்பிடிக்கின்ற
மனிதனே...

தீமைகளைத்
தூண்டும் போதும்
பாவங்களைச்
செய்யும் போதும்
ஆதாரங்கள் தேட
மறந்து போவதும்
ஏனோ?

அருள் மறையை
ஓதுவதற்கும்
ஹதீஸ்களை அறிவதற்கும்
ஓய்வுகளில்லையெனப்
புலம்புகின்ற
மனிதனே

தொல்லை தரும்
தொலைக் காட்சியிலும்
சீரழிக்கின்ற சினிமாவிலும்
சீரியல்களிலும்
சிதைந்து கொண்டிருக்கின்ற
உன்
சிந்தனைகள்
சிதறிப் போவதும்
ஏனோ...?

உனது
மனசாட்சியிடமே
தேடு ஆதாரத்தை
நன்மைகளை
வெறுக்கும் போதும்!
தீமைகளை
நாடும் போதும்!

## இறுதியுரை

எனது
சந்ததிகளே
சற்றுக் கேளுங்கள்

எனது நெஞ்சுக்குள்
அடிக்கடி
வந்து மோதுகிறது
அந்த நினைப்பு!!

ஆம்
அது எனது
மரணத்தின் நினைப்பு!!

எனது நாசியில்
அடிக்கடி
வந்து வீசுகிறது
அந்த வாசம்!

ஆம்...
அது எனது
கபுறுடைய வாசம்!!

நான்
ஓய்வெடுத்துக் கொள்ளும்
காலம்
மிக அண்மித்துவிட்டதாக
உணர்கிறேன்!

எனது மரணம்
எம் வாசலில் வந்து
காத்து நிற்பது போல்
தோன்றுகிறது!!

எனது
இளம் தளிர்களே...
உங்களால்தான்
நான்
"அன்னை" எனும் மகுடத்தைச்
சுமந்தேன்!

ஒரு சராசரி
அன்னையாக நான்
உங்களோடு வாழவில்லை!
ஓர் இலட்சியத் தாயாக
வாழ்ந்ததை
நீங்கள் அறிவீர்கள்!!

எனது
போதனைகள் எதுவும்
சாதாரணமானவை அல்ல!
உங்கள் ஆயுளுக்கும்
போதுமானவைகளாகும்!

எனது
மரணத்துக்குப் பின்னாலும்
அவைகள்
உங்கள் வாழ்வுகளின் மூலமாக
உயிர் வாழ வேண்டும்!

எனதுயிர்ச் செல்வங்களே
நீங்கள்
மன்னர்களாக, மந்திரிகளாக
வாழ வேண்டுமென
நான் இறைவனிடம்
கேட்டதில்லை!
ஆனால்...

உத்தமர்களாக, பக்தர்களாக உங்களை
வாழ வைக்கும்படி
தினம் அழுது கேட்கிறேன்!

நீங்கள்
ஆட்சியாளர்களாய், அதிகாரிகளாய்
வாழ வேண்டுமென
நான் என்றுமே...

ஆசைப்பட்டதில்லை!
அன்புள்ளம் கொண்ட
பண்பாளர்களாக வாழ வேண்டும்
என ஆசைப்படுகிறேன்.

செல்வர்களாக, சீமான்களாக
நீங்கள் வாழ்வதில்
எனக்கு பெருமையில்லை!
புனிதர்களாக, மனிதர்களாக
வாழ்வதிலேயே
பெருமை காண்கிறேன்!!

படிப்பு மிகுந்தாலும்...
பணம் நிறைந்தாலும்...
பதவி உயர்ந்தாலும்
பெருமையெனும்
நஞ்சை
உண்டுவிடாதீர்கள்!

எந்தவொரு
சூழ்நிலைகளிலும் நீங்கள்...
உங்களது பண்புகளை
இழந்துவிடாதீர்கள்.

பரம்பரைகள் தோறும்
உறவுகளின் ஒற்றுமைகளைப்
பேணிக் கொள்ளுங்கள்

மிக
அற்பமானது இந்தப் புவி!
நிலையில்லாதது!!
நிரந்தரமில்லாதது!!
இந்த வாழ்க்கை!!
இதில் என்றென்றுமே...
மயங்கிப் போகாதீர்கள்!!

ஓர்
அற்புதமான சொத்தாக
உங்கள் தந்தையை
உங்களிடம்
விட்டுப் போகிறேன்.

கடைசிக் காலங்களில்
கண் கலங்க
விட்டு விடாதீர்கள்

என்
காலம் நெருங்கிவிட்டது
விடைபெறுகிறேன்!
இறைவன்
என்றென்றும்
உங்கள் மீது
நல்லருள் பொழிவானாக – ஆமீன்

நன்றி :
எங்கள் தேசம் - 2014

# காத்திருக்கிறேன்

நானறிவேன்
இவையெல்லாம்
உனது
சோதனைகளேயன்றி
தண்டனைகளல்ல என்று!

உனக்கு ஒரு
மாற்றமான ஈனச்செயலை
நான்
செய்தறியேனென
உனையன்றி
யாரறிவார்
என் ஏகனே!

மனச்சாட்சியோடும்
மனிதாபிமானத்தோடும்
வாழ்வுச் சுமைகளை
ஜீரணித்துக் கொண்டதை
நீ
அறிந்தவனன்றோ.

துன்பங்கள் தொட்டாலும்
துயரங்கள் சுட்டாலும்
கரைப்பிடித்த தகரம் போல்

கவலை கொண்டு
துருப்பிடிக்க விட்டதில்லை
எனது உள்ளத்தினை!

தேங்கியுள்ள
நீர்த்தடாகம் போன்று
தெளிந்து போயிருக்கும்
எனதுணர்வுகள்

இருப்பினுமென்ன
ஏதோ ஒரு சுமையும்
ஏதோ ஒரு பாரமும்
அழுத்திக் கொண்டிருக்கிறது
எனது
உள்ளத்தையும்!
உணர்வுகளையும்!

காரணம்
யாதெனப் புரியாமலே
இன்னும்
தேடி அலைகிறது
எனது உள்ளம்

விடை சொல்
எந்தன் இனிய
நேசனே!
காலமெல்லாம் அதற்காய்
காத்திருக்கிறேன்.

(16.01.2009)

# உண்மைகளே

உலகம் உலகம் என்றே
உள்ளம் ஓடுது!
இந்த உண்மையைச் சொன்னால்
உள்ளம் நோகுது!!

பணம் பணம் என்றே
மனம் பறக்குது!
இதை எடுத்துச் சொன்னால்
பகை மீறுது!!

ஆசை... ஆசை என்றே
இதயம் ஏங்குது!
இதை தவிர்க்கச் சொன்னால்
ஏற்க மறுக்குது!

ஏக்கம் ஏக்கம் என்றே
எண்ணம் வாடுது!
இதை நிறுத்தச் சொன்னால்
உதைகள் விழுகுது!!

உண்மை நன்மை எல்லாம்
உலகில் மறையுது!
அதை தேடச்சொன்னால்
நெஞ்சம் மறுக்குது!!

(2013.06.02)

# நல்வழியில் மட்டும்

இனம் கண்டேன்!
உனது
கவிதைகளால்
உன்னை!

வியந்தேன்!
நீயா
இப்படி என!!

நம்பமுடியவில்லை
இன்னும்
இப்படியான
உனது கற்பனைகளை!!

எல்லை
மீறிப் போகலாமா?
எழுத்துக்களால்
உன்
சுதந்திர விளையாட்டில்??

கவிஞனே...
தவிர்ந்து கொள்
ஆபாசத்தை!
தடுத்துக் கொள் அசிங்கத்தை!!
உன்
பெயர் காக்கும்படி
நடந்து கொள்!!!

வெற்றிகள் பெற
வீர நடைபோடு
தீய வழியில் அல்ல!
நல் வழியில் மட்டும்!!

(2013.06.02)

நன்றி: எங்கள் தேசம்
2015

# வேண்டுதல்

கிளம்பிவிட்டார்கள்
வேட்டையாட
நமது
சமூகத்தை!
கொள்கைகளை!!
கலாச்சாரங்களை!!!

வேடிக்கை
பார்த்துக் கொண்டிருப்பதா
இன்னும்!

உறங்கியது போதும்
எழுந்து நில்லுங்கள்!
வீரத்துடன் மட்டுமல்ல
விவேகத்துடனும் செல்லுங்கள்!

நமது
முன்னோர்கள்
ஜெயித்தகதை
சரித்திரங்கள் வழிகாட்டியுள்ளன!
கையாளுங்கள் அவைகளை!!

வெட்டி வீழ்த்துங்கள்
அநியாயங்களை!
சுட்டுப் பொசுக்குங்கள்
அநீதங்களை!!

தலைவர்களே!
மறந்துவிட வேண்டாம்!!
கோழைத்தன்மைகளை
வெறுக்கின்ற சமூகத்தில்
பிறந்தவர்கள்
நாம் என்பதை

வீரத்தை!
நீதத்தை!!
மனிதத்தை!!!
வாழ வைக்க வேண்டிய
தார்மீகப் பொறுப்பின்
கடமையானவர்கள்
நாம்
என்பதை!!!

வீரம் கொண்டு
எழுந்திடுங்கள்!
விவேகத்துடன்
நடந்திடுங்கள்!!

நீதத்தை
இறைவனிடம்
வேண்டிடுவோம்!
அவனருளால்
வெற்றிகள் கண்டிடுவோம்!!

நன்றி: விடிவெள்ளி
16.05.2013

# தூது செல் மேகமே

வான் மேகங்களே
தூது செல்லுங்களேன்!
என் தலைவனிடம்
சென்று சொல்லுங்களேன்!!

அவனையே எண்ணி – ஒரு
ஜீவன் வாழுதென்று!
அல்லும் பகலும்
உள்ளம் உருகுதென்று!!

அவனைக் காணும் ஆவல்
எல்லை மீறுதென்று!
இராப் பகல்
ஏக்கம் கூடுதென்று!!

உள்ளமும் உணர்வும் – அவன்
நிழல் தேடுதென்று!
அவனுக்காக மனம்
மெழுகாய் உருகுதென்று!!

அவனது எண்ணம் வந்தால்
நெஞ்சம் நெகிழுதென்று!
கண்கள் இரண்டில்
கண்ணீர் பெருகுதென்று!!

அவன் நாமம் கண்டால்
ஸலாம் உரைக்குதென்று!
அவன் தியானிப்பில் நித்தம்
உள்ளம் களிக்குதென்று

அவன் அன்பையும் அருளையும்
மனம் யாசிக்குதென்று
அவன் அருகாமையும் கருணையும்
கெஞ்சிக் கரையுதென்று

வான் மேகங்களே...
கொஞ்சம் நில்லுங்களேன்
எனது ரஹ்மானிடம்
என் நிலை சொல்லுங்களேன்.

(02.06.2012)

# எழுத்தாளனே

எழுத்தாளனே எழுது
உள்ளங்களை நோகடித்து
உறவுகளை சாகடித்து
எழுதுவதை விடு!

சுட்டிக்காட்டுவதை தொடு!
குத்திக் காட்டுவதை விடு!!

வாழ்ந்து காட்டு – பின்
வாழ்வதை எழுது!
நிகழ்த்திக் காட்டு – பின்
நேர்மையை எழுது!!

பொய்களை ஒழிக்க!
புறங்களை ஒழிக்க!!
புயலாக எழுதுகின்றாய்!!
உனக்குள் வாழ்கின்ற
அவ்வுணர்வுகளை ஒழிக்க
மறந்து வாழ்கின்றாய்!

தீமைகளை உணர்ந்து கொள்ள
உனக்குள் தூய சக்தியுண்டு
பாவங்கள் தவிர்ந்து வாழ
உனக்குள் பவ்ய திறமையுண்டு.

இருந்துமென்ன இன்னும் – நீ
உன்னை திருத்த வில்லை!
பாவம் நீங்கி வாழ – ஓர்
பாதை கட்டவில்லை!!

வஞ்சம் நீக்கி வாழ – ஓர்
வழியைச் சொல் தோழா
நெஞ்சம் நிமிர்ந்து வாழ– ஓர்
நிலையைச் சொல் தோழா

தூய அன்பை பொழிந்து – மண்ணில்
நேர்மையை எழுது தோழா!
நெஞ்சம் நெகிழும் வண்ணம்
கொஞ்சும் மொழியில் எழுது தோழா!!

உலகைத் திருத்த எழுது!
உன்னைத் திருத்தி எழுது!!
நாடு போற்ற எழுது!!!
நாமும் போற்ற எழுது!!!

2012.06.05

# அறிவாய் அன்று

ஆசையோடு
சுமந்து நின்று
அவதியோடு ஈன்றெடுத்து
அன்போடு பேணிக்காத்து
அறிவைப் பெற கல்வியூட்டி
அழகிய துணை தேடி
ஆவலோடு இணைத்து வைத்தார்
உனது அன்னை!

அறிவையிழந்த மனிதனாக
அழகு மனைவி அடிமையாக
அனைத்தும் மறந்தாய் மடந்தையாக

உனை
ஈன்ற அன்னை எங்கே?
உனை வளர்த்த
தந்தை எங்கே?
எனும் தேடல்
இல்லை இங்கே!!!

இளமையும்
இனிமையும்
நிலையானது இல்லை என்றும்
நீயும் வயோதிபம்
ஆவாய் அன்று
பெற்றோரின் துன்பம்
அறிவாய் அன்று!

நன்றி: மித்திரன் வாரமலர்
2009.08.23
நன்றி: விடிவெள்ளி
12.02.2015

# தொல்லை

நீ
செய்யும்
தீங்குகளாலே
நாம்
அழிந்து போகவில்லை!

இறையன்பு
எனும்
காவல்தானே
எங்கள் வாழ்வின்
எல்லை!!

உன் –
அற்ப மிரட்டல்கள்
என்றும்
எம்மை
அசைக்கவில்லை!!

நீ போடும்
தும்மல் என்றே
நாம்
சட்டை
செய்யவில்லை!!

நீ பாவம்!
என்றே
நாமும்
அனுதாபம் கொள்ளும்
வேளை!

நீயோ
எம்மை ஏனோ?
எட்டி
உதைக்கும்
தொல்லை

2003.10.07

# தீர்ப்பு

"சட்டம்"
என்றொரு பேரில்
சர்வாதிகாரம்!!

குற்றவாளிகளுக்கு
தடைகளில்லா
சுதந்திர
வாழ்க்கை!

நீதி
கேட்போருக்கு
ஜெயில் வாழ்க்கை!!

ஓ மனிதமே
நீ எங்கே?
எப்போது இறந்து போனாய்??
யாருக்கும் தெரியாமல்
தகனம் செய்துவிட்டார்களா
உன்னை??

மீண்டும் வா
சர்வாதிகாரங்களை அழித்திட!
கோழைகள்
உண்மைகளைக் கொன்று
மண் தோண்டிப்
புதைத்துக் கொண்டிருக்கிறார்கள்!!
சுரைக்காயைச்
சோற்றில் மறைக்கப்
போராடிக் கொண்டிருக்கிறார்கள்!!!

காலமே
சொல் அவர்களிடம்!
மக்கள் கோழைகள் அல்லர் என்று!!
இறை "தீர்ப்பை"
வெகு விரைவில்
காண்பீர்கள் என்று!!!

2013.04.02

# இது எப்படி நியாயமாகும்?

எனக்கும்
உனக்கும் மட்டுமேயான
போராட்டம் இது!

எனது
உள்ளமும் உணர்வுகளும்
தினந்தினம் சண்டையிடுகின்றன
உன்னோடு!

ஓர்
தொடர்கதை போன்று
இன்னும் நீடித்துக் கொண்டு போகிறது
உனது இந்த
மௌனம்!!

இனியும்
பொறுமை இல்லை
என்னிடம்!!

எனது
வேதனைள் யாவும்
உனக்கு
வேடிக்கையாகிவிட்டதா?

போதும்!
நிறுத்து!!
உனது விளையாட்டை
மௌனத்தை!!

கரைந்து கொண்டிருக்கிறேன்
இராப் பகலாக
உன்னை எண்ணி!
உன் இந்த மௌனத்தை எண்ணி!!!

கருணையின்
சொந்தக்காரன்
நீ என
பல நூறு கவிதைகள்
எழுதினேன் உனக்காக!

நீதிக்கு
நிகரானவன்
உனையன்றி எவருமில்லை என
கதைகள் எழுதினேன்
பந்தி பந்திகளாக!!

உன்னையே
நம்பி...
நாடும்படி
கட்டுரைகள் எழுதினேன்
மிக ஏராளமாக!!!

உயர்வான
வெற்றிகள் கிடைத்ததாகச் சொன்னார்கள்
அதைப் படித்தவர்கள்!

எனது கரங்கள்
என்றுமே தோற்றுப் போனதில்லை
உன்னிடம்!!

வெற்றிகளால்
எனது வாழ்வை
அழகு படுத்தியவன் நீ!

நான் அறிவேன்!
இது உனது
தண்டனையல்ல!!
சோதனைதான்!!

இந்தச்
சோதனைகளின்
ஆயுளை
அதிகப்படுத்திவிட்டாயே

என் றப்பே
சொல்!
இது எப்படி உனக்கு
நியாயமாகும்?

2013.02.01

# தென்றலே...

தென்றலிடம்
இரவல் பெற்றேன்
ஒரு பிடித்
தென்றலை

புயலிடம்
இரவல் பெற்றேன்
ஒரு பிடிப்
புயலை!

இரண்டையும் ஒன்றாய்
இணைத்து வைத்தேன்
திருமணமும் அழகாய்
செய்து வைத்தேன்!

தென்றல் அழுதது
புயலை மறுத்து
புயல் அழுதது
தென்றலைக் கேட்டு!

ஓர் இரவும்
ஓர் பகலும்
பரஸ்பர நட்பில்
ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு
இருவரும் ஒன்றாய் வாழ்வில்
இணைந்து கொண்டனர்!

புயல் மாறியது
தென்றலாக!
தென்றல் குளிர்ந்தது
மகிழ்ச்சியாக!

புயலைத் திருத்திய
தென்றல்
புவியிடம் கேட்டது
இவ்வாறாக!

மாந்தர் குலமே
மாறிவிடுங்கள்
உத்தம புத்திரர்களாய்
வாழ்ந்திடுங்கள்!

புயலாய் வாழும்
வாழ்க்கை வேண்டாம்
புண்ணியராய் வாழக்
கற்றிடுங்கள்!

தென்றல் மொழியும்
உபதேசம் கேட்டால்
தேனாக இனிக்கிறது
செவிப்பறைகள்!

புயலாக வாழும்
மாந்தரை மாற்றப்
புறப்படுவோம் நாமும்
தென்றலாக!!!

(10.12.2013)

# யார் நீ?

மனிதனே
யார்
நீ?

இறைவன்
இயக்கத்தில்
இயங்கிக் கொண்டிருக்கும்
வெறும் கருவி
நீ!

வந்து போகின்ற
தற்காலிக'
வாழ்க்கைக்காக கிடைத்திருக்கும்
வாடகை உடலின்
சொந்தக்காரன்
நீ!

அவனது
ஆற்றல்களைக் கண்டு
ஆனந்தப்பட
ஆச்சரியப்பட
பார்வைக்குள் படம் பிடிக்க
கண்ணொளியைத் தந்து
கொண்டிருக்கும்

இரவல் விழிகளின்
உரிமைக்காரன்
நீ...?

இரவிலோ பகலிலோ
வீட்டிலோ... வீதியிலோ
இளமையிலோ...
முதுமையிலோ...
எங்கே...
எவ்வாறு...
எனத்தெரியாமல்

ஓர்
கணத்தில்
பிரியப் போகின்ற
உனது உயிரை
உடலில் வைத்து
பாதுகாக்கின்ற
வெறும்
களிமண் உருவம்
நீ...

நினைத்துப் பார்
உன்னை
ஒரு நொடியில்
வீழ்ந்திடும்
உனது
ஆணவங்கள் அத்தனையும்!

நன்றி: எங்கள் தேசம்
15.08.2014

## காற்றோடு கலந்துவிட்டது

இதயச் சுமைகளை
எழுத்துக்களாக
இறக்கி வைத்தேன்
இதமாகத் தோன்றியது!

எனினும்
இன்னும் தேடுகின்றேன்
காணாமல் போன நிம்மதி
தொலைந்து போன
இடத்தை!

ஒரு நாள்
ஒரு வருடம்
ஒரு யுகமென
தேடித் தேடியே
தோற்றுக் கொண்டிருக்கிறது
வாழ்க்கை!

அங்கே என்றனர்
இங்கே என்றனர்
எங்கெங்கோ என்றனர்!
எல்லா இடங்களிலும்
தேடியாயிற்று!

தொடர்
தேடல்களின்
தோல்விகளின் பின்
அங்கலாய்த்து
சலித்துப்போன பிறகுதான்
புரிந்தது
சிதைந்து வீழ்ந்த நிம்மதி
“சிதறி”
காற்றோடு
கலந்து விட்டது என்று!!!

நன்றி:
எங்கள் தேசம் - 15.05.2014

# உயிர் தரும் உறவு நீ

என்ன நினைத்து
என்னைப்
பார்க்கின்றாய்!

எதை நினைத்து
நீ
சிரிக்கின்றாய்!

பிஞ்சுக் கரங்களால்
கன்னம்
வருடுகின்றாய்!

மலர் இதழ்களால்
முத்தங்கள்
பொழிகின்றாய்!

சின்னக் கால்களால்
நடை
பயில்கின்றாய்!

திராட்சைக் கண்களால்
குறும்புகள்
புரிகின்றாய்!

வண்ண ஆடைகளால்
தினம்
மாறுகின்றாய்!

மழலை மொழிகளால்
எம்மை
உயிர்க்கின்றாய்!!!

நன்றி: நவமணி
17.08.2014

# நீதம் வேண்டும்

அழித்துக் கொண்டிருக்கிறார்கள்
உனது இல்லங்களை
அழுது கொண்டிருக்கின்றன
எமது உள்ளங்கள்!

தொடர்ந்து கொண்டு போகிறது
சர்வாதிகாரங்கள்
குறி வைக்கப்படுகின்றன
எமது கலாச்சாரங்கள்!

இறைவா...,
கலைத்துவிடு
உனது மௌனத்தை
காட்டியருள்
உனது நீதத்தை!

பொறுமை காக்கிறோம்
உனக்காக
ஐவேளை தொழுகிறோம்
உனக்காக!

பள்ளி என்பது
உனது சொத்து
அதை பேணிக் காப்பது
உனது பொறுப்பு

அக்கிரமங்கள் தொடர
அனுமதியாதே...
பாவங்கள் தொடர
இடமளியாதே!

இருகரம் ஏந்துகிறோம்
உன்னிடமே!
தாமதமின்றி காட்டியருள்
உன் நீதமே!!!

(நன்றி விடிவெள்ளி - 2013)

# உணரமுடியாத மனிதனே

அவனுக்கும்
எனக்குமான
உறவு இது
நீ யார்
அதை மறுக்க!

அவனுக்கும்
எனக்குமான
நெருக்கம் இது
நீ யார்
அதை நிறுத்த!?

அவனுக்காக
அர்ப்பணித்த வாழ்க்கை இது!
நீ யார்
அதைத் தடுக்க?

அவனுக்கென்றே
வாழும்
ஜீவன் இது!
நீ யார்
அதை அடக்க?

அகிலத்தின் அதிபதிக்காக அர்பணித்த
மூச்சு இது!
நீ யார்
அதை உணர?

மண்ணாசை பொன்னாசையுள்ள
மனிதன் யார்
மனித தூய ஜெபத்தை
உணர?

மடமையுள்ள
மானுடன் யார்
தூய அமலல்களை அறிய?

(2012)

# மானம் காத்திட வாரீர்

உயிர் போன
வெறும் உடலை வைத்து
நடந்தது
இந்த போராட்டம்!!

பள்ளிச் சந்தா தராத உமக்கு
மையத்தடக்க உரிமையில்லை
நமதுயிர் போனாலும் போராடுவோம்
ஜனாஸாவையடக்க இடமளியோம்!
என்பதான கூளுறைப்பில் ஒரு கூட்டம்

பள்ளியென்பதோ பொதுச் சொத்து
உமக்கு மட்டுமன்று
எமக்கும்தான் உரிமையுண்டு!
என்பதான பதிலில் மறுகூட்டம்!!

காலை கடந்து
மாலையும் வந்தது
இன்னும் முடிவில்லாப் போராட்டம்!
ஊர் முழுக்க
இதுதான் பேச்சு!
எல்லோர் மூச்சும் இதில் அடங்கலாச்சு!

பொலிஸ் கேஸென போன போதும்
பெரியோர்களும்தான் வந்த போதும்
வார்த்தைகள் தொடர்ந்து வம்புகளாச்சு!
முடிவில் இல்லை வேறொரு பேச்சு!!

காத்திருந்த மையத்தை சுமந்து சென்று
பக்கத்து ஊரில்
அடக்கிய பின்னும்

மான நஷ்டயீடு கேட்டு வழக்குகள் தொடர
வாக்கு வாதங்கள் நாளும் தொடர
அடிதடி உதைகளால் இரத்தம் வழிய
இணக்கங்கள் யாவும் துகழ்களாய் உதிருது
நம் சமூக அற்பத்தனங்களினால்
உள்ளமோ வேதனையில் கதறுது!!

நரிகள் சிரிக்க
தெரு நாய்கள் சிரிக்க
புயலாக சுழலுது நீதம்!
பூப் போல் உதிருது
நம் சமூக மானம்!!

மறை தந்த வேதம்!
மா நபி தந்த போதம்!

காத்திடாததினால் இந்த வாதம்!
என்று கரைந்திடுமோ
இந்தப் பிடி வாதம்!

வீண் போராட்டங்களை நிறுத்தி
ஒன்றாய் இணைவோம் வாரீர்!
"ஈகோ"வைக் களைந்து – நமது
உரிமைகளைக் காத்திட வாரீர்!!
மாற்றார் நகைக்கின்ற
மடமைகள் வேண்டாம்!
மார்க்கம் வெறுக்கின்ற
பிளவுகள் வேண்டாம்!!

ஒற்றுமைதனை உயிரென மதிப்போம்
நபி வழியை வாழ்வில் சேர்ப்போம்!
நுனி நாவில் தேனும்
உள் நாவில் விஷமுமாய்
நடமாடும் நரிகளை இனம் காண்போம்
நம் சமூக மானம் காத்திட – நாம்
யாவரும் ஒன்றாய்க் கை கோர்ப்போம்

நன்றி : எங்கள் தேசம்
2012.08.01

# வெறுப்பு

கழுவிக் கொள்!
அழுக்காகிப் போன
உனது
அன்பினை!!

நீக்கிக் கொள்!
கறைபடிந்து கரிந்துவிட்ட
உனது
நட்பினை!!

நிறுத்திக் கொள்!
கேட்டுக் கேட்டு
அலுத்துப் போன
உனது
போலி வார்த்தைகளை!!

தடுத்துக் கொள்!
படித்துப் படித்து
ஏமாந்து போன
உனது
வார்த்தை ஜால மடல்களை!!

தவிர்த்துக் கொள்!
நன்மைகளுக்கும்...
நன்றிகளுக்கும்
தகுதியில்லாத
உனது
தொடர்புகளை!!

விலகிக் கொள்!
இனி என்றுமே
தொடர விரும்பாத
உனது
வருகையினை! (2011)

# உருவமில்லா உண்மைகள்

கண்கள் கண்டிட முடியாது
இருந்தும் உலகில் இருக்கிறது
என்ன அதன் பெயர்
தெரிந்தால் நீவிர் சொல்லிடுக
எனத் தொடுத்த வினாவுடனே
கடவுளை காற்றை ஜீவனை
அழகான விடையும் பகர்ந்திருந்தீர்!

அவன் சொன்னது “பொய்” என்பர்
அந்த பொய்யை நாம் கண்டதில்லை!
இவன் உரைத்தது “மெய்” என்பர்!
அந்த மெய்யை யாரும் கண்டதில்லை!!

செவியினில் ராகம் இனிக்கிறது! அந்த
ராகத்தை யாரும் கண்டதில்லை
இனிதாய் பாடல் ஒலிக்கிறது!
அந்த ஒலிக்கு ஏதும் உருவமில்லை!

குயில் இனிதாய் கூவுகிறது அந்த
குரலுக்கு ஏதும் உருவமுண்டா?
நற்குணங்கள் நாட்டைக் காக்கிறது!
அக்குணத்தைக் கானும் சக்தியுண்டா??

நன்மை, தீமை எதுதானும்
உருவங்களற்ற சங்கதிதான்!
கண்களுக்கெட்டா காட்சிகளற்ற
உணர்வுள்ள உண்மைகள் ஏராளம்!!

உருவமில்லா சப்தங்கள் - யாவும்
செவிடன் செவியில் வீழ்வதில்லை
மலையென உருவம் நின்றாலும்
குருடன் விழிகளுக்கு தெரிவதில்லை

உள்ளம் உணர்ந்திடும் உண்மைகள்
உலகில் மிக மிக ஏராளம் - இந்த
உண்மையை உணர்த்திய உள்ளத்தையும்
சத்தியமாய் நானும் கண்டதில்லை

மித்திரன் வாரமலர் கலாவானம் பகுதியில் ஸ்ரீதர்
பிச்சையப்பாவின் கவிதைக்கு பதில் கவிதை.
பிரசுரம் (2003)

# தாக்கம்

கொந்தளிக்கும் அலைகளின்
குமுறலும் தோற்கும்!
கோடைக் காலத்து
பெருந் தீயும் தோற்கும்!
மாந்தரை அழிக்கின்ற
வெள்ளமும் தோற்கும்!!!
மனதில் தேங்கும்
பொறாமையின் தாக்கம்!!!

இரக்கம் அற்ற
வேங்கையும் தோற்கும்!
விஷத்தைக் கொண்ட
நாகமும் தோற்கும்!!
புவியை அழித்திடும்
புயலும் தோற்கும்!!!
மனதை அழித்திடும்
பொறாமையின் தாக்கம்!!!

மின்னல் மிஞ்சும்
இடியும் தோற்கும்!
இரும்பை உருக்கிடும்
நெருப்பும் தோற்கும்!!
வஞ்சத்தின் பிடியில்
வாழ்வுகளை அழித்திடும்
மாந்தரிடம் நிறைந்த – இந்த
பொறாமையின் தாக்கம்!!!

29.11.2003

நன்றி: எங்கள் தேசம்
01.12.2014

# உந்தன் முல்லை

நீ செய்யும்
நன்மைகளினாலே
நெஞ்சம் நெகிழ்ந்து போகிறேன்!
நீ காட்டும்
அன்பினாலே
எனை மறந்து வாழ்கிறேன்!!

மாந்தர் காட்டும்
வேஷங்கள் யாவும்
மண்ணில் நிலை இல்லை!
நீ தந்த
இன்பங்கள் தானே – என்
இனிய வாழ்வின் எல்லை!!

நாங்கள் வாழும்
வாழ்வுகள் யாவும்
உலகில் நிலை இல்லை!
என்றெண்ணும்
எண்ணங் கூட
மாந்தர் நினைவில் இல்லை!!

பாவக் கடலில்
மிதக்கும் புவியில்
இனி வாழ விரும்பவில்லை!
இறைவா எனை
ஏற்றிடு
நானே உந்தன் முல்லை!!

(27.11.2003)

# திருப்தி

கேட்பதையெல்லாம்
கேட்டுக் கொண்டிருக்கிறாய்
இன்னும்
கிடைக்கவில்லை
என்ற ஆதங்கத்துடன்!

வெறுப்புடன் வேதனையுடன்
கேட்கிறாய்!
பொறுப்புடன்
பொறுமையுடன் கேட்கிறாய்!!

கண்ணீரோடும்
கவலையோடும் கேட்கிறாய்!
கொஞ்சலோடும்
கெஞ்சல்களோடும் கேட்கிறாய்!!

நிற்கவில்லை
உனது வேண்டுதல்!
நீங்கவில்லை இன்னும்
உனது நம்பிக்கை!!

தேடிப்பார்!
உனக்குள் இருக்காது
அவனுக்குப் பிடித்தமான செயல்

திரும்பிப்பார்!
உனது வாழ்க்கையில்
நற்செயல்கள் புரிந்த நாளை!

நிமிர்ந்து
பார்!
தீமையை விட்டும்
நீங்கியிருந்த உன் வாழ்வை!

பூஜ்ஜியங்களின்
நுழை வாயிலில்
இன்னும் நீ

மாற்று!
அவன் சொன்ன வாழ்வில் உன்னை!
கிடைக்கும் எல்லாம்!!
இறை திருப்தியின் வடிவில்!!!

நன்றி:
விடிவெள்ளி 2013

# பொக்கிஷம்

கவலைப்படுகிறார்கள்
இல்லாத பணத்திற்காக!
கவலைப் படுவதேயில்லை
இழந்த பண்புகளுக்காக!!

அலைகிறார்கள்!
சொத்துக்கள் தேடி
சுகங்கள் நாடி!!

அலைவதேயில்லை!
சொந்தங்கள் தேடி!!
பந்தங்கள் நாடி!!!

சிந்தனை செய்கிறார்கள்
மூளையை குழப்பிக் கொண்டு
எப்படியெல்லாம்
பாடுபடலாம்
பணம் தேட என்று!

சிந்தித்துப் பார்ப்பதேயில்லை!
எப்படி வாழ்ந்தால்
சொந்தங்களை பேணலாம்!
பந்தங்களுடன் வாழலாம் என்று!!!

உடைத்துவிடுகிறார்கள்!
உள்ளங்களை
உறவுகளை
உயர்வில் இல்லையெனில் !!

உணர்வதேயில்லை!
உறவுகள்தான் என்றென்றுமே
உண்மையான
சொத்துக்களென்று!!

உதைத்துவிடுகிறார்கள்!
உதவவில்லை
நீ என்று!!

உணரத்
தவறிவிடுகிறார்கள்
உயர்ந்த பொக்கிஷம்
உண்மையான உறவுகள்தான் என்று

(23.12.2009)
தி.க. வாரமஞ்சரி

## ஏன்?

எதிரொலித்துக் கொண்டிருக்கிறது
உலகெங்கிலுமே உனது
போதனைகள்

திருத்திக் கொண்டும்
திருந்திக் கொண்டும்
பல உள்ளங்கள்

மாறிக் கொண்டும்
மாற்றிக் கொண்டும்
பல வாழ்வுகள்!!

புகழ்ந்து கொண்டும்
இகழ்ந்து கொண்டும்
பல உறவுகள்!!

போற்றிக் கொண்டும்
தூற்றிக் கொண்டும்
பல நட்புக்கள்!!

உனக்கு மட்டும் இன்னும்
உதவாத நிலையில்
உனது
உரைகள்!!

உனது வாழ்வில் இல்லை
உனது உரையில்
உதிரும்
உண்மைகள்!!

உன்னையே
திருத்த முடியாத
நிலையில்
இன்னும்
நீ...!

நன்றி:
நவமணி - 04.07.2014

# மனிதம் தேடுது மனசு

தூய நட்பு வேண்டும் - மனம்
துறந்து பழக வேண்டும்
துன்யாவில் தேடுகின்றேன்!
துரோக இதயம் உண்டு
குரோத பழக்கம் கண்டு
துயரில் வாடி நின்றேன்!!

இனிய நேசம் வேண்டும்
இதமாய்ப் பழக வேண்டும்
இறைவனிடம் வேண்டி நின்றேன்!
இனிக்க பழக்கம் கொண்டு
இடியாய் புழுக்கம் கொள்ளும்
இதயமே காணுகின்றேன்!!

தூய நேசம் வேண்டும்
துயரைப் பகர வேண்டும்
துணைக்காய் தேடுகின்றேன்!
துணையென்று வந்து போகும்
துருப்பிடித்த இதயம் கண்டு
துன்பத்தில் கரைந்து போனேன்!!

ஏகனே உந்தன் எண்ணம்
ஏந்தி வாழும் இதயமொன்றை
ஏற்றமாய் எனக்கு காட்டிடு!
ஏக்கமாய் தேடி நிற்கும்
என்னிதய வலியைப் போக்கும்
ஒத்தடமாய் எனக்கு மாற்றிடு!!

இனிய ஏகனே உன்னிடம்
இன்பம் காணும் என்னிடம்
தூய உள்ளம் ஒன்றினை
துன்யாவில் எனக்கு காட்டிடு!
தூய்மை மென்மை வெண்மையாய்
துரிதமாய் கொணர்ந்து சேர்த்திடு!!

நன்றி: எங்கள் தேசம்
01.07.2010

# என்றுமே நான் தயார்

துரத்தாதே
என்னை!
உன் எதிரியைத்
துரத்துவதைப் போல்!

வா
என்னோடு நீயும் கைகோர்த்து!
ஒரு தோழமையுடன்!!

நான் அறிந்ததுதான்!
என்றாவது
எந்நிலையிலாவது
என்னை நீ
ஆக்கிரமித்துக் கொள்வாயென!!

சில வேளைகளில்
நான் நினைக்கிறேன்!
நீ
அவசரப்பட்டு விட்டாயோ என்று...

அதனாலென்ன?
அறியத் தந்தமைக்கு
நன்றி!

எனது மரணமே!
என் அலுவல்களையெல்லாம்
நான் அவசரமாக
முடித்துக் கொண்டேன்!!

உன்னுடனான
பயணத்திற்கு
இனி
என்றுமே
நான் தயார்!

நன்றி:
நவமணி - 2010

# பதில் சொல்லுங்கள்..!

புதுக்
கவிதைகளுக்குப்
பெயர் சூட்டினர்
"கொள்கைகள்" என்று

பிளவு பட்டுப் போனது
உள்ளங்களும்
உறவுகளும்
ஏன்?
ஊர்களும்தான்!!

சாரிசாரியாக
சவாரி செய்கின்ற
கூட்டங்கள் ஒருபுறம்
இணக்கங்களை
போதித்தும். வலியுறுத்தியும்

பிரிவுகளால்
சின்னா பின்னமாகின்ற
இணக்கங்கள்
மறுபுறம்
கோடி இன்னல்களுடன்

மனங்களே
சொல்லுங்கள்!
நீங்கள் போதிப்பது
நபியவர்கள் காட்டிய
மதத்தையா?

இல்லையேல்
உங்களது
மடத்(தனத்)தையா?

நன்றி: பேனா. (2012 ஜனவரி)

# இறைவனிடம் வேண்டிடுவோம்

இது எங்கள் கலாசாரம்!
இது எங்கள் உரிமை!

ஏன் எதற்காக யாருக்காக?
நாம் விட்டுக் கொடுக்க வேண்டும்?

காப்போம் காப்பாற்றுவோம்
நாம் யாவரும் ஒன்று படுவோம்

அரைகுறை ஆடைக்கெல்லாம்
நாம் அடிமையில்லை
அபாயா வாழ்வை தவிர்க்க
நாம் தயாரில்லை
ஹலாலற்ற உணவைப் புசிக்க
நாம் என்றும் தயாரில்லை

நமக்கென ஒரு வலிமையுண்டு
அதுதான் எங்கள் பிரார்த்தனை

நம் சமூகமே...
இன்றே கைகளை ஏந்திடுவோம்
இறைவனிடம் மன்றாடி வேண்டிடுவோம்
இதற்கொரு நிவாரணம் கேட்டிடுவோம்

விடிவெள்ளி
04.04.2013

## தெரிந்துகொள்!

கொக்கரிக்கும் கோழிக்கும்
கூவும் சேவலுக்கும்
கொள்கைகள் தேவையில்லை!

ஆர்ப்பரிக்கும் கடலுக்கும்
ஆனந்த மீனுக்கும்
ஆசைகள் ஏதுமில்லை!

அமைதியான நதிக்கும்
அதில் மிதக்கும் படகுக்கும்
ஆனந்தம் வேறு இல்லை

மானுடக் கொக்கரிப்பும்
மனங்களின் கொந்தளிப்பும்
இன்னும்
மடமையைப் போக்கவில்லை!

ஆர்ப்பரிக்கும் கடலிலே
ஆனந்த மீனைப்போல்

வாழ்க்கையில்
ஆனந்தம் காணவில்லை

அமைதியான நதியைப் போல்
அதில் ஊரும் படகினைப் போல்
உல்லாசம் கிடைக்கவில்லை
கொள்கையெனும் பேரிலே
போர்களும் பேர்களும்
அழிவினைத் தடுக்கவில்லை

போதனைகள் பேரிலே
ஆயுதமாய் தாக்குவது
அறிவுக்கு அழகு இல்லை


தானென்ற நஞ்சைத்
தன்னுள் அகற்றி
முதலில்
தன்னைத் திருத்தத் தெரியவில்லை

நன்றி:
எங்கள் தேசம்

## மனிதமே!

மரணிக்கவில்லை...
மனித நேயங்கள்..!
மதங்களைக் கடந்து
மனித உருவில்...
மனங்களில் இன்னும்
மணத்துக் கொண்டிருக்கின்றன!!

நன்றி: மித்திரன்
2009.10.02



ISBN: 978-955-0932-11-5

Pena Publication

9 789550 932115

250.00 SLR

ஜரீனா முஸ்தபாவின் கவிதைகள் தனக்கானதொரு வழியில் எழுதப்பட்டவை. அவருக்கே உரித்தான கவிதை மொழி கொண்ட ஈழத்தின் பெண் படைப்பாளிகளில் தனித்துவமானவர் என்றும் சான்றளிக்கலாம். சூழலில் தெரித்துக்கிடக்கும் சவால்களை தன்னுடையதான மாற்று வழியில் அவர் எதிர்கொண்டிருக்கிறார் என்பதற்கு இக் கவிதைகள் சான்று. சகோதரி ஜரீனா முஸ்தபாவின் எதார்த்த சூழல் இன்னொரு புறச் சூழலாக திரும்பி விடுகிறது. அவரின் கவிதைக்கான கருவும் மொழியும் அங்கேதான் பிறப்பெடுக்கின்றதான நிஜத்தை கவிதைகளினுள் ஆழமாக புகுந்து பார்ப்பதன் மூலம் நீங்களும் அறிந்து கொள்ளலாம்.

ஜே. பிரோஸ்கான்

2014.08.20